

# நெருநல்

இ.சு.முரளிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருநல்

இ.சு.முரளிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரிமை: மு.சாந்தினி

முதல் பதிப்பு: யூன்-2015

வெளியீடு: மேதினிகா 34/3 செட்டித்தெரு.நல்லூர்

வடிவமைப்பு:தானா விஷ்ணு

அட்டை ஓவியம்: பெடல் பஸ்கலோ(ஆஜன்ரீனா)

அச்சுப்பதிப்பு: ஆகாயம் பதிப்பகம், இமையாணன்,
உடுப்பிட்டி, யாழ்ப்பாணம்

நெருநல்

இ.சு.முரளிதரன்

ISBN:978-955-7790-00-8
Price: 150/=

NERUNAL

R.S.MURALEETHARAN

**Copy right:**M.Shanthiny
**First edition:** June 2015
**Publishers:**Methinika, 34/3, Chetty Street, Nallur
**Layout:**Thana Vishnu
**Cover painting:** Pedal Pascalo (Ajanteena)
**Printing:**Aakayampathippakam,Imayanan,
Uduppiddy,Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ.யோகராசா

சோ.பத்மநாதன்

குப்பிழான் ஐ.சண்முகன்

ஆ கி யோ ரு க் கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நன்றி*

தானா விஷ்ணு, க.பரணீதரன்,
கே.எஸ்.சிவகுமாரன், தெணியான்,
த.கலாமணி, இ.இராஜேஸ்கண்ணன்,
யாத்ரிகன், த.ஜெயசீலன்,
த.அஜந்தகுமார், தி.செல்வமனோகரன்,
சி.விமலன், கே.எம்.செல்வதாஸ்,
பூ.நகுலன், ஜபார், சீனா.உதயகுமார்
ஆகியோருக்கும் ஆகாயம்
பதிப்பகத்திற்கும் கவிதைகளைப்
பிரசுரித்துதவிய ஜீவநதி, திருவுடையாள்,
புதியநிலா, ஏகலைவன் ஆகிய
இதழ்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை, மனம் வழி இயங்கும் மொழி

தாணா விஷ்ணு

கவிதைபற்றி பேசத்தொடங்கும் போது பலருடன் முட்டி மோத வேண்டியதாயிருக்கிறது. பொதுவாக மக்களுக் கானதே இலக்கியம் என்ற கருத்துடமையுடையவராக தங்களைக் காட்டிக்கொள்ள எல்லோரும் எத்தனிக்கும் போது இலக்கியம் பற்றி சர்ச்சை தோன்றுவதை தவிர்க்க முடிவதில்லை.

இலக்கியம் என்பது தனியுடமையானதல்ல என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தாலும். பொது வுடமையாவதற்கு இது ஒன்றும் சரக்கல்ல என்ற எண்ணத் தினையும் முன்னுணர்ந்து கொண்டவர்கள் பொதுத் தளத்தில் பேச வரும்போது வெளிப்படையாகப் பேசலாம். ஆனால் பலரும் தமது கவிதைகளுக்கான அந்தஸ்த்து வேண்டும் வேணவாவில் கருத்துக்களை வன்மத்துடன் முன்வைக்கும் போது அவர்களுடன் பேசுவதற்கு ஒன்றுமே இல்லாமல் போய்விடுகின்றது.

இங்கு கவிதை எப்படி இருக்க வேண்டும் என்பதல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை. எப்படியிருக்கக் கூடாது என்பதே பிரச்சினை.

கவிதைக்கென்று பொது விதி இல்லாமல் இருந்தாலும் கூட காலம் காலமாக அனுபவித்து வந்த கவிதையுணர்வினைக் கொண்டு கவிதை தொடர்பான பொது வெளியினைத் திறந்துபார்க்க முடியும் என்பதனை உணர்ந்து கொண்ட எவரும் வீண் வாதங்களில் தமது காலங்களை செலவிட விரும்பாமல் தமக்கான இலக்கிய இடத்தினை தமது இலக்கிய வெளிப்பாட்டுக் கருவியின் மூலமாக கண்டு பிடித்துக் கொள்வர்.

எவரையும் இலக்கியப் புலத்தில் இருந்து தூக்கி வீசும் உரிமை யாருக்கும் இல்லாத போதும் தாம் விரும்பிய நுகர்ச்சியினை பெற்றுக் கொண்டும் விரும்பாதவற்றினை விலக்கியும் வைத்துக் கொள்ளும் உரிமை ஒவ்வாரு நுகர்ச்சியாளனுக்கும் உண்டு. இது இலக்கியத்தில் மட்டும் இல்லை. ஒவ்வொருவரும் தனது அன்றாட வாழ்வில் தான் நுகர்ந்து கொள்ளும் ஒவ்வொரு பொருளிலும் விலக்களிப்புச் செய்வது சர்வ சாதாரண விடயம். அவனை யாரும் கட்டுப்படுத்த முடிவதில்லை. அவனிடம் போய் குற்ற விசாரணை செய்யவேண்டியதுமில்லை, செய்யவும் முடியாது. தனக்குப் பிடிக்காதவற்றை பிடிக்கவில்லை என்று சொல்லும் உரிமையையும் யாரும் தடுத்துவிடுதலும் முடியாது. ஆனால் இலக்கியத்தில் மட்டும் அந்த உரிமை எழுத்தாளனுக்கோ, வாசகனுக்கோ வழங்கப்படாமல் இருப்பது வருத்தத்துக்குரியதாகவே இருக்கிறது.

படைப்பாளனை அவனது படைப்பின் தளத்துக்குச் சென்று பார்க்கும் திறந்த மனவெளியினை கொண்டியங்கும் குழுமம் மிகச் சொற்பமாகவே காணப்படுகிறது. எண்ணற்ற அனுபவெளியினைக் கொண்டியங்கும் படைப்பினை வெறுமனே விளங்கவில்லை என்ற பாதி வட்டத்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டு குமைத்துக் கொள்ளும் அபத்தம் தமிழ் படைப்பிலக்கியத்திலேயே அதிகம் காணப்படுவதாக என்னால் கருத முடிகின்றது. ஆனால் என்னால் விளங்கிக் கொள்ள முடியாதிருப்பது என்னவென்றால், தமிழின் மூத்த இலக்கியம் என்று கருதப்படும் சங்ககாலக் கவிதைகளை வாசித்தோம் "அற்புதம்" என்று சொல்லும் பலரும் ஈழத்து கவிதையுலகில் வலம் வந்து கொண்டிருக்கும் பல கவிஞர்களுடைய படைப்பு வெளியை விளங்கவில்லை என்று புறம் தள்ள முனைவதுதான்.

சங்ககாலத்ததை விளங்கிக் கொண்டோம் என்பது ஒரு பெருமைக்குரிய கருத்து வெளியாகத் தோற்றம் கொள்கிறது.

சங்ககாலக் கவிதைகளை விளங்கிக்க கொள்வதற்கு ஒருவர் எத்தனை பிரயத்தனப்படுகின்றார். சாதாரணமாக விளங்கிக் கொள்ளும் அளவிற்கு எளிமையானதாக அங்கு பயன்படுத்தியிருக்கும் மொழியோ சொல் முறையோ அமையவில்லை, இற்றையளவில் அக்கவிதைகளுக்கு இணையாக தமிழில் கவிதையும் வரவில்லை, அக்கவிஞர்களுக்கு இணையாக தமிழில் கவிஞர்களும் தோற்றம் பெறவில்லை என்பது பொதுவான கருத்து. அது உண்மையாகவும் இருக்கலாம், ஆனால் இத்தகைய கூற்றுக்களைக் கூறும் அறிஞர் பெருமக்களில் பலர் தற்காலக் கவிதைகளையோ, தற்காலக் கவிஞர்களையோ அறிந்திருக்கவில்லை என்பதனையும் நான் இங்கு மனவருத்தத்துடன் தெரிவிக்க விரும்புகிறேன்.

எல்லோரும் பொதுவான விடயமொன்றை மறந்துபோயிருக்கிறார்கள். சங்ககாலத்துடன் கவிதை செத்துப்போயோ, வழக்கொழிந்துபோயோ விடவில்லை. அது காலத்துக்கும் தன்னில் பல வடிவ மாற்றங்களுடன் சொல்முறை மாற்றங்களுடன் தன்னை வெளிப்படுத்தி வந்துகொண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கிறது. அத்தகைய மாற்றங்களை எதிர் கொள்ளத் தெரிந்த இலக்கிய நுகர்ச்சியாளர்களுக்கு தற்கால மாற்றத்தை சகித்துக் கொள்ளமுடியவில்லை என்பது முரண் நிலைபேற்றுக் குரியது.

சங்கமருவிய காலத்தில் புதிய யாப்புக்களையும் பாடல் முறைமையையும் பரீட்சார்த்தமாகப் பயன்படுத்திய காரைக்காலம்மையாரை இன்று வரை ஏற்றுக்கொள்ளும் இலக்கிய நுகர்ச்சியாளர்களின் மனநிலையினை உண்மையில் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

கவிதையென்றால் என்ன என்று பலரும் கேட்டுக் கேட்டுக் களைத்துப் போயிருக்கிறார்கள். எல்லோரையும் பொறுத்த மட்டில் தாங்கள் ஒவ்வொருவரும் எழுதுவதெல்லாம் கவிதை என்று நினைப்புக்கொள்ளும் உரிமை இருக்கிறது. அதற்கு யாரும் மறுப்புச் சொல்லிவிட முடியாது. கவிதை யோட்டத்தை நன்கு புரிந்துகொள்ளக் கூடிய ஒவ்வொரு வரும் தமது மனச்சாட்சியுடன் நின்று தாங்கள் எழுதுவது கவிதைதானா என்று குறைந்தது மூன்று தடவையாவது கேட்டுப்பார்த்தால் சிலவேளை அவர்கள் கவிதை பற்றிய பல விடயங்களை புரிந்து கொள்ளக்கூடும். அப்படியும் புரிந்து கொள்ள முடியவில்லை என்றால். அத்துடன் அவை தொடர்பான எண்ணத்தை அல்லது கதையை விட்டு விடுவது நல்லது.

ஆனால் அதற்காக அவர்கள் எழுதுவதை நிராகரித்துவிடும் உரிமையினையும் யாரும் எடுத்துக் கொள்ள முடியாது. "தக்கனப் பிழைக்கும்" என்ற விதியினை நாம் மனதில் கொண்டால் அத்தோடு எல்லாம் சரி.

நான் இவற்றைச் சொல்வதற்குக் காரணம், சில படைப்பாளிகள் "கவிதை எளிமையாக்கல்" என்ற கோட்பாட்டை முன்வைத்து பேசவும் எழுதவும் தொடங்கியி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கிறார்கள். எளிமை என்னும் அர்த்தத்தை அவர்கள் எவ்விதம் விளங்கிக் கொண்டுள்ளார்கள் என்பது பொதுப் பிரச்சினையாகவுள்ளது. சங்ககாலம், சங்க மருவிய காலம், பல்லவர்காலம் என நீண்டு செல்லும் வரலாற்றுக் காலங்களில் தோற்றம் பெற்ற இலக்கியங்களை விளங்கிக் கொள்ளும் ஆளுமையினை வளர்த்துக் கொண்டவர் களுக்கு அக்காலக் கவிதைகள் எளிமையானவை யாகத்தான் இருக்க முடியும். ஏனெனில் இலக்கியத்தின் எளிமை என்பது விளங்கிக் கொள்ளுதல் என்ற பொருளுக்குரியதாக அமையப்போவதில்லை. நிச்சயமாக அனுபவ நுகர்ச்சிக்கு மிக அண்மையாக அந்த இலக்கிய வெளித்தெறிப்பு வளர்ந்து வருவதனையே கருத்தில் கொள்ள முடியும்.

வெறுமனே வரிக்கு வரி விளங்குதல், அல்லது விளக்குதல் என்ற அர்த்தப்படுத்தும் கருத்துக்களை முன்வைக்கும் ஒவ்வொருவரும் தனது உள்ளார்ந்த அனுபவ நுகர்ச்சி யினை எந்தப்படைப்பிலக்கியத்திலிருந்தும் பெற்றுக் கொள்ள முடியாதவராகவே தோற்றுப்போகிறார்.

அதன் ஆற்றாமையினாலேயே எளிமைப்படுத்தல் எளிமை யாக்குதல் என்ற வேண்டுதலை முன்வைக்கவும் முனைகி றார்கள். ஒரு இலக்கிய படைப்புவெளியினை விளங்கிக் கொள்ள முடியவில்லை என்பதால் "எட்டாக்கனி புளிக்கும்" என்ற நரியினுடைய கோட்பாட்டை முன்வைக்கவும் முனைகிறார்கள். ஆனால் தற்காலத்தில் கனியைப் பறிப்ப தற்குரிய முயற்சியில் நரிவெற்றி பெற்று வருவதாக சிறுவர் களின் கதைகளின் மூலம் அறியவும் முடிகின்றது.

இது கால மாற்றத்தைக் குறிக்கின்றது. இந்தக் கால மாற்றத்துக்கு ஏற்ப வாசகன் தன்னை தயார்ப்படுத்தாமல் இருப்பது பழைய நரிக்கதைக்குப் பிறகு தனது அறிவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்க வைக்க விரும்பாது இருப்பதன் பொருளினை எடுத்துரைக்கின்றது. கவிதை அறிவியல் அல்ல, அனுபவ வெளி. கவிதையினை நுகரும் போது வாசகனின் அல்லது நுகர்ச்சியாளனின் அனுபவ உணர்வு விரிவடைகின்றது. அது தரும் அனுபவ நுகர்ச்சியின் மூலம் அவன் தன்னை யொரு புதுப்பொருளாய் உணர்கிறான். எல்லையற்ற வெளியொன்றில் வியாபித்துக் கொள்ளும் ஒளியாக தன்னை உணரவும் செய்கிறான். இந்தப் பிரபஞ்சக் கூறின் எல்லையற்ற கடலை கடக்கும் தகமைக்கு தன்னை கொண்டலைகிறான். அவனுக்கென்று புதிய அனுபவமும், அறிதல் நுகர்வும் கிடைக்கின்றன.

இங்கு அவன் எதனையும் விளங்கிக் கொள்ள முனைவ தில்லை. காற்றைக் காண்பதோ, விளங்கிக் கொள்வதோ இலகுவானதல்ல. ஆனால் எல்லையற்ற உணர்திறனை அனுபவித்துக் கொள்ள முடியும். இந்த அனுபவம் மனதுள் புதிய பூரிப்பினை ஏற்படுத்திக் கடந்து செல்வதனை உணர்ந்து கொள்ள முடியும். இத்தகைய வெளியினைக் கண்டடையும் ஆத்ம ஞானப்பேற்றினையே கவிதையும் நிகழ்த்துகின்றது.

வெறுமனே விளங்குவது எல்லாம் கவிதையென்றோ விளங்கவில்லையென்றால் கவிதையில்லையென்றோ எடுத்துக் கொள்ளுதல் முடியாது. ஏனென்றால் விளங்கு வது எல்லாம் கவிதையென்றால், நகரங்கள் தோறும் தொங்கிக் கொண்டிருக்கும் விளம்பரங்களையும் விற்ப னைக் கடையில் ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதப்பட்டிருக்கும் விலைப்பட்டியலையும் கவிதை என்று எண்ணிக் கொள்ள வேண்டிய அபத்தமான இலக்கிய வெளியினை நாம் உருவாக்குபவர்களாகிவிடுவோம்.

கவிதைக்கான சர்ச்சைகள்,சிக்கல்கள் வலுப்பெற்றி ருக்கும் காலத்தில் தான் இ.சு.முரளிதரனும் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைத் தொகுப்பொன்றை வெளிக்கொண்டுவரும் அவாக் கொண்டுள்ளார்.

இ.சு.முரளிதரனுக்கு ஏற்கெனவே தனது இரண்டு கவிதைத் தொகுப்புக்களும் எதிர்கொள்ளாத சர்ச்சை களையும் விமர்சனங்களையும் இத்தொகுப்பு வாங்கித் தரப்போகிற தென்பது வெளிப்படையானது. ஏனெனில் முன்னைய தொகுப்புக்கள் அனுபவ நுகர்ச்சிக்குரியவையாக இல்லா மல், அறிதல் நுகர்ச்சிக்குரியவையாக அமைந்ததன் காரணத்தினால் எவரது சிந்தனைக்கும் இடம் அளிக்க வில்லை, அதனால் கேள்விக்குட்படுத்தும் திறனையும் பெற்றுக்கொள்ள வில்லை.

ஒருவனை எது ஆழமாக சிந்திக்க வைக்கிறதோ அது கேள்விக்குட்படுத்தும். வாசகன் ஒருவன் அத்தகைய இலக்கியங்களை வாசித்தபின் உள்ளார்ந்த பல கேள்விக ளுடன் மன அலைச்சலுக்கு உள்ளாகுவான். இந்தத் தொகுப்பு நிச்சயமாக அதனை ஏற்படுத்தும். அப்போது இ.சு.முரளிதரன் பல இடைஞ்சல்களை அடைந்து கொள்ள வேண்டியவராகிப்போவார்.

கவிதை எளிமைப்படுத்தப்படவேண்டும் என்ற கோட் பாட்டினை முன்வைப்பவர்களுக்கு எதிரானதாகவே இத் தொகுப்பிலுள்ள கவிதைகள் அமையப்போகின்றன. கவிதை மொழி ஏனைய இலக்கிய வடிவங்களினை விட வேறுபாடுடையது. சிறுகதையை எழுதுவதுபோல் கவிதை களில் வார்த்தைகளைக் கொட்டிப்பரப்புதல் முடியாது. கவிதைகளில் மொழிச்சிக்கனம் அவசியம். அவசியமற்ற வார்த்தைப் பிரயோகத்துக்கு இடமில்லை.

கவிதை மொழியைக் கையாள்வதற்கு பயிற்சி அவசியம். தொடர்ச்சியான பயிற்சி மூலமே அத்தகைய மொழியி னைக் கண்டடைய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிக்குவரி விளக்கங்களை மொய்த்து வீசும் கவிதைகளிட மிருந்து வாசகனுக்கு என்று விட்டுச் செல்வதற்கு ஒன்று மில்லாமலே போகின்றது. அக்கவிதைகள் வாசகனுக்கு இடைஞ்சலையும், அருவருப்பையும் தந்துவிடக் கூடியன. இதனை இ.சு.முரளிதரன் நன்குணர்ந்திருக்கின்றார். தனது முன்னைய கவிதைகளின் பயிற்சிகளிலிருந்து தேர்ந்தெடுத்த மொழிப் பிரயோகத்தைக் கையாளும் திறனையும், நேர்த்தியினையும் பெற்றிருக்கின்றார். இது அவர் நினைத்து வந்ததல்ல. அவரை அறியாமலே உள்ளார்ந்த இயல்பாக ஏற்பட்டுக்கொண்டது. அவர், தான் சொல்லும் வார்த்தைகளை விடவும் சொற்களுக்கிடையில் விட்டுச்செல்லும் எண்ணற்ற அனுபவநுகர்ச்சியினை தன்வயப்படுத்தியுள்ளார்.

இங்கு வாசகனுக்கு சிந்திப்பதற்குரிய வெளி அதிக மாக்கப்படுகின்றது. ஆனால் அனுபவவெளிச் சிந்தனை தொடர்பான அறிதலற்று விளங்கிக் கொள்வதுதான் கவிதை எனும் சித்தாந்தத்துடனான கருத்துவெளிகளை உருவாக்கமுனையும் எழுத்தாளர்களுக்கும் வாச கனுக்கும் இவர் சிக்கலை உருவாக்க முனைகின்றார். அவர்களுடன் சமரசத்திற்கு போகமுடியாத இக்கட்டான மனவெளியினை உருவாக்கும் இ.சு.முரளிதரன், தனக்கான கவிதை மனத்தைக் கண்டடைந்திருக்கிறார்.

கவிதை எழுதுதல் என்பதற்கான முதற் தகுதியே கவிதை மனம் வாய்க்கப் பெறுவதுதான்.

கவிதை அனுபவத்தின் வாயிலாக மனத்தின் வழி இயங்குவது. ஓர் அனுபவம் மனத்துள் ஊறி, வடிகட்டி அறிவு பூர்வமான மொழியுடன் இணைந்து வெளிவருவதே கவிதை விளைவு என்பது எனது கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் அனுபவப் பொறி கவிதையாகி வருவதற்கு கிழமை, மாதம்,வருடம் என்ற இடைவெளிகள் கூட தேவைப்பட லாம். உடனடிக் கவிதைத் தயாரிப்பு கவிதை மனத்தைச் சிதைத்துவிடும் அபாயத்தைக் கொண்டுள்ளது. இந்த உணர்திறன் இ.சு.முரளிதரனிடம் இருப்பதை அவருடைய கவிதைகளை வாசிக்கும் போது கண்டு கொள்ள முடியும்.

ஈழத்து இலக்கியப் படைப்பியலின் தன்மையினை நோக்கும் போது போர், போரின் வலி, போர்ச் சிதைவு போரின் அவலம் என நீண்டு வந்து போரின் பின்னரான சமூகத்தின் பெறுமானம் எனத் தொடர்ந்து கொண்டி ருக்கும் ஒருவழி உருவாக்கம் கட்டமைக்கப்பட்டு வருவது தெளிவிற்குட்கிடையானது. இது தவிர்க்க முடியாத ஒரு அம்சம்தான்,

எமது வாழ்வு போருக்குள்ளானது என்பதால் அதனை விடுத்து இலக்கியம் படைப்பது சாத்தியமற்றது. இருந்தா லும் அதனைத்தண்டி தன்னுணர்வுசார் கவிதைகள் தோன்றிய வண்ணம்தான் இருக்கின்றன. இவ்வாறான கடந்தேகு தன்மையானது இ.சு.முரளிதரனுடைய கவிதை களில் இருப்பது திருப்திக் குரியது.

இ.சு.முரளிதரனுடைய பலமும் பலவீனமும். அவர் தமிழ் கற்பிக்கும் ஆசிரியராக இருப்பதுதான். தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுள் பலர் பாடத்திட்டத்திற்குரிய பாடங்களை கற்பிப்பதோடு சரி தாம் முயன்று மேலதிக தேடல்களை நிகழ்த்துவதில்லை. தமிழின் குறுக்கும் நெடுக்கும் தமது புரிதல்களுக்கு உள்ளீடானது என்ற எண்ணத்துடன் திரிபவர்களாக மட்டுமே இருக்கின்றார்கள். மாணவர் களுக்கென மேலதிகமாக எதனையும் கொடுத்து விட முடியாமல் மாணவர்களுக்கு அவை அவசியமற்றவை என்று கூறிக்கொண்டே சமாளிக்கும் நிலையில் இருக்கின்றார்கள். ஆனால் இ.சு.முரளிதரன் அவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமல் ஆழமான தேடலுக்கு தன்னை உட்படுத்திக் கொண்டு தனது தேடல்மூலம் கிடைத்த பலவற்றினை தனத மாணவர்களுக்கு கடத்துபவர் இவரது தேடல் எப்போதுமே பரீட்சார்த்தமான முயற்சியில் ஈடுபடத் தூண்டிக்கொண்டிருக்கிறது. அதன் ஓர் அம்சந்தான் அவரது சிறுகதைத் தொகுப்பான கடவுளின் கைபேசி எண் இப்போது நெருநல் என்ற கவிதைத் தொகுப்பு.

ஏற்கெனவே தமிழில் இருந்து வழக்கொழிந்த சொற்களை மீள் சுழற்சிக்குக் கொண்டுவர முனைதல், தமிழில் புதிய சொற்களை உருவாக்கம் செய்தல் இவரது முயற்சியின் முக்கியமான அம்சம். ஆனால் இத்தகைய வேணவா வலிந்து சொற்களை கவிதைகளிடையே செருகும் மெசின்தனத்தினை உருவாக்கிவிடும் என்பது கவனிக்கப் படவேண்டியது. கவிதைகளிடையே அவ்வாறு சொற்கள் வந்து சேரும் இடம் ஒட்டிக்கொள்ளாமல் தனித்து நிற்கும் இயல்பொன்றியுள்ளது.

தமிழிற்குப் புதிய சொல்லுருவாக்கம் வலிமையைத் தரக்கூடியதுதான். ஒரு மொழியில் புத்துணர்ச்சியும் இளமையும் மேலோங்கவேண்டும் என்றால் புதிய சொற்களஞ்சியங்களின் வரவு முதன்மைக்குரியது. இவ்வாறானதொரு தன்மையில்தான் இ.சு.முரளிதரன் தன்னை ஏனைய படைப்பாளிகளிடமிருந்து வேறுபடுத்தி நிற்கின்றார்

ஆனாலும் இத்தகைய முயற்சி கவிதையை சிலவேளை பலவீனப்படுத்தி விடவும் கூடும். பொதுவாக நவீன கவிதைகளை இருண்மைக்கவிதைகள் என்ற சொற் தொடரால் ஒதுக்க முனையும் நுகர்ச்சியாளர்கள் இருக்கும் ஈழத்து சூழலில் இ.சு.முரளிதரனுடைய கவிதைகளும் அத்தகைய சட்டகத்துள் அடைக்கப்படும் ஆபத்தும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருண்மை அழானது என்பதனை சங்ககாலக் கவிதகளில் பரிச்சயம் உள்ளவர்கள் அறிய முடியும். அக் கவிதைகளை வாசிக்கும் போது அதனுள் பொதிந்திருக்கும் அனுபவப் பேறு தரும் இன்பம் அலாதியான இன்பம் . இன்றுவரை அவை போற்றவும் பேசவும் எண்ணற்ற விடயங்களைக் கொண்டுள்ளன. ஒவ்வொருவரினது வாசிப்புக்கும் வெவ் வேறான ஆத்மார்த்த வெளியினைத் திறந்துகொடுப்பது அவற்றின் வெற்றியாகின்றது. இது அக்கவிதைகளின் இருண்மைத்தன்மையிலிருந்து கிடைத்த மாற்று இன்ப மாகும். தொடர்ச்சியான தேடலை உண்டுபண்ணுவதற்குத் தூண்டுவதால் இன்றும் அவை நிலைபேற்றுக்குரிய ஒன்றாக இலக்கியப் பரப்பில் நிலைகொள்கின்றன.

இருண்மை என்பது தேடலை உண்டுபண்ணத் தூண்டு வது. ஒரு குரூர இருட்டுவேளையில் மிக அவசியமான பொருளை தேடிப்பெற்றுக் கொள்ளும் போது கிடைக்கும் மன நிம்மதிபோலவே இருண்மைக் கவிதைகளும் உண்டு பண்ணுகின்றன என்பது எனது நம்பிக்கை. அதனை வெற்றியாகவே கருதுகின்றேன். தேடலை உண்டு பண்ணாத எதுவும் இந்த உலகுக்கு அவசியமற்றது என்பது எனது எண்ணம். இ.சு.முரளிதரனுடைய இந்தக் கவிதைகள் வாசகனிடத்தில் தேடலை உண்டுபண்ணும் என்றே நான் கருதுகிறேன்.

இன்னொரு விடயத்தினையும் நான் இங்கு முன்வைக்க வேண்டும். இ.சு.முரளிதரனின் இந்தக் கவிதைகள் சம காலக்கவிஞர்களின் தாக்கங்களை கொண்டியங்கு கின்றன. இது தவறானதல்ல. சமகாலத்தில் பேசும் விடயங்கள் ஒன்றாக இருக்கும் போது கவிதை மொழி ஒத்த தன்மையில் இயங்குவது தவிர்க்க முடியாதது. ஆனால் கவிஞன் ஒருவன் தனக்கான மொழியைக் கண்டடைய வேண்டியது அவசியம். அந்தக் கண்டடைதல் சடுதியாக ஏற்படக் கூடியது அல்ல. காலப்போக்கில் கவிதை மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாகவே தனக்கான தேர்ந்த மொழியைக் கண்டடைந்து கொள்ளும். அதற்கு சிலவேளை இவர் நீண்டதூரம் பயணிக்கவேண்டியும் ஏற்படலாம்.

ஆனாலும் இவர் கவிதையில் சடுதியாக ஏற்படுத்திய மாற்றம் போலவே மொழியைக் கண்டடைவதிலும் நிகழ்த்தக்கூடும். எப்படிச்சொன்னாலும் இ.சு.முரளிதரனிடம் இயங்கும் கவிதைமனம் நீண்ட காலத்துக்குப் பிறகு மனம் நெகிழக்கூடிய கவிதைகளை அனுபவிக்கத் தந்திருக்கிறது.

இ.சு.முரளிதரனுடைய கவிதைகளுக்குள் உள்நுழையும் நுகர்ச்சி மனங்களைச் சிதைத்துவிடக் கூடாது என்ற முன் நிபந்தனையுடன் அவரது கவிதைகள் எதனையும் உதாரணமாகவோ எடுத்துக் காட்டாகவோ நான் முன்வைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாமத் தெருவில்
முடிவற்ற தேடலொன்றில் சந்தித்தோம்
சவர்க்காரக் குமிழ்களால்
காற்றிலே கவிதை புனைந்தபடி
நகர்கிறது காலம்
எதுவித சலனமுமின்றி
பயணத்தைக் குமிழ்களால் நிரப்புகிறது

குட்டிகளை வாயிற் கவ்வும்
பூனையொன்றின் பிரியத்தோடு
ஒவ்வொரு கண்ணாடி உருண்டையையும்
உராய்ந்து
தன்னை உணர்கிறது காற்று

வரிக்குதிரை நிழலின்
வெண்ணிறம் தேடி அலைந்த நாம்
குமிழ்களில் குமிழ்களாகவே தெரியும்
நமது விம்பங்களை
அப்புறப்படுத்தப் பிரயத்தனப்படுகிறோம்

ஒரு வழிப்பாதையில்
காற்றை எதிர்க்கும் திராணியற்று
ஸ்தம்பிக்கின்றன காலடிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைகள் அள்ளிச் சென்ற
பாதச் சுவடுகள்
மீண்டும் கரை ஒதுங்கும் என்னும்
நம்பிக்கையோடு காத்திருக்கிறது நகரம்
காலம் தின்ற நாள் ஒன்றை
மீட்டெடுக்கும் வல்லமை
யாரிடமும் இல்லை

அபிமன்யு
பத்மவியூகத்தின் மறுபாதி
அறியாததால்
வாளின் பாடல்கள் நகர் நீங்கின
குழந்தைகளை விழுங்கியே
மீசைகள் பசியாறும் எனில்
அவற்றை வளர்ப்பதில் அர்த்தமில்லை

வெறுமை சுமக்கும்
உதட்டின் மேற்பகுதியில்
பென்சிலால் கோடு வரைபவனே!
மழிகருவிகள் உரோமங்களின்
வேர் தேடிச் சிராய்த்த காலத்தை
நீ அறியாதிருக்க நியாயமில்லை.



இ.சு.முரளிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரட்டையாய் உள்ளது பாஞ்சாலி தலை

பாண்டவரின் தொடைக்கறி தின்று
விக்கல் எடுத்த துரியோதன விருட்சங்கள்
செந்நீர் அருந்திய கலயத்தை
மோப்ப நாய் கவ்விச் செல்கிறது

நுளம்பு உதிர்ந்த பின்பு
விரலில் ஒட்டியிருக்கும்
குருதிச் சுவட்டை
கழுவிக் கழுவிச் சோர்வடைகிறது தேசம்

தேசமும் சகோதரங்களும் பாஞ்சாலியும்
பரிதவிக்க
வாகை மரத்திலே தொங்கினான் தர்மன்

தர்மனை வீழ்த்தியது
சகுனியின் விரல்களோ
தாயக்கட்டையின் நிகழ்தகவோ
ஆடுகளத்தின் மேற்பரப்போ அல்ல
அவரவரை
அவரவரே வைத்தாடும் அறம்
உணராமை.

நெருநல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் விதைத்தானியங்களை
காவிச் சென்றன
உன் எறும்புகள்

பல்வகைமை உருக்காட்டியை
அதிரச் செய்து
என் எதிர்பார்ப்புகளின்
வடிவத்தை மாற்றின
உன் நண்டுகள்

என் திருவிழா சிக்கிக் கொண்டது
ஒற்றைக்கால் ஊன்றிய
உன் கொக்கின் அலகில்

பிரார்த்தனைகளின்
கழுத்து நெரிக்கப்பட்ட சமவெளியில்
பைத்தியமாய் அலைகிறேன்
நெருங்கி வருகிறது
காதலோடு
உன் வெட்டுக்கிளி.



இ.சு.முரளிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தப்புரத்துப் பெண்களை இரவல் கேட்போர்

மாசி 2015

இச்சையற்றுத்திரியும் தருணத்தில்
என் அந்தப்புர அரசிகள்
நிர்வாணத் தூண்டிலிட்டு
வேட்டைக்கு அழைக்கின்றனர்

உறக்கம் உடைபட்ட
புடையன் பாம்பைக் பிழிந்து கொடுத்து
உச்சக்கலவித் திரவத்துள் அமிழ்ந்து
மர்மத் தீண்டலில்
காமமலை குடைந்து வெளியேறுகிறேன்

புணரத் தெரியாதவனிடம்
அகப்பட்டதாக
அரசிகள் சிலரின் புறுபுறுப்பு
உழைக்கும் பணத்தில்
புதிதாய் ஒவ்வொருத்தியைக் கூட்டிவர
அரசிகளின் ஒழுங்கின்மைக்காய்
அம்மாவின் ஏச்சு நீள்கிறது

பருகித் தீராத பரவசத்தை
நண்பர்களுக்கு உரைத்தால்
தாமும் அனுபவிக்க இரவல் கேட்கின்றனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதும்
என் மார்பின் உரோமத்தை ஸ்பரிசித்தபடி
கவிழ்ந்து படுத்திருக்கிறாள்
சங்ககால இளவரசி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹீ



சோபை தெவிட்டாத கூழாங்கல் போல்
புன்னகைக்கும்
குழந்தை ஒன்றை ஏந்திய பிச்சைக்காரியின்
வயிற்றை
கடந்தேகும் நாணயத்தாள்
எதிர் எதிரான
நிலைக் கண்ணாடிகளின்
நடுவில் நின்று
ஏதோ ஒன்றினது இறுதி விம்பத்தை
கடவுளெனப் பிரார்த்திக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாழடைந்து புதர் மண்டிய
உன் வீட்டைக் கடக்கும் போது
பழுத்தும் பசுமையுமாய் இலை சுமக்கும்
பூவரசு
உன் சீருடையை நினைவுபடுத்துகிறது.

உன் கல்லறையும் கனவுகளும்
கண் துப்பிய பீளையைப் போலத்
துடைத்தெறியப்பட்டமை வலிக்கிறது
நீ
மின் கம்பத்திலே
தொங்கவிட்ட சடலத்தின்
கண்களை காகம் கொத்திய தருணத்தில்
வலித்ததைப் போலவே.



இ.சு.முரளிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவிலிச் சதுரங்கம்

தை 2015

பூமியை மொய்க்கும்
தேனீக்களாய் மழை
வெயிலின் நறுமணத்தை
நீர்மை அபகரித்துக் கொண்டது
மஞ்சள் ததும்பி வழிந்த கூடையிலே
தேனீக்கள் குடி புகுந்தன
தீராத வானத்தின் நொடிச் சிரிப்பு
பெருவெளியை வேவு பார்த்தது.

தாவரங்களின் அந்தப்புரத்தில்
தேனீக்கள் புணர்ந்து பரவசமெய்தின
கருத்தரித்த சிசுக்கள்
சுவடு பதியாமல் நடக்கும்
மஞ்சள் தேவதையின்
பதின்ம வயது ஸ்பரிசத்திற்காகக்
காத்திருக்க
தெவிட்டாத வசீகரத்தோடு தொடர்கிறது
இயற்கையின் முடிவிலிச் சதுரங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் முற்றத்தின்
நிர்வாணத்தைக் கண்டு
முகம் சுழித்தபடி தகித்தது வெயில்
வேலியோரச் சிறுசெடியின்
மொட்டுகளுள் பதுங்கிய இருளையும்
விரட்டியடித்தது

அந்தியில் பறந்த வௌவால்
மீயொலி நுட்பத்தால்
வெயிலைத் திரட்டித்தின்று தீர்த்தது
நடுநிசியில்
மர்மவிலங்குகள் தேநீர் அருந்திய
கோப்பைகள்
முற்றத்திலே சிதறிக் கிடக்கின்றன

விடியலுக்காக
முறிப்பு நடனம் ஆட முயன்ற
நண்டொன்றின் கோது
நாயின் சிறுநீரால் நனைகிறது

மூன்றாம் சாமத்தில்
உடுத்திய ஆடையை
சற்றே நெகிழவிட்டுச் சரசமாடுகிறது
நம்முற்றம்

இணங்கிப் போகிறது நிலவின் ஒளி.


இ.சு.முரளிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் போகிறாள்

தை 2015

அவள் போகிறாள்
முதல் எத்தனிப்பில்
ஊசியில் கோத்த நூல் மறந்து
குகைச் சுவர்களில்
கொம்புகளை உராய்ந்தபடி

கதவுத்தாழில் துருவேறிய இச்சை
கூன் விழுந்து தேம்ப
யுகந்தோறும் ஆராதித்த உடலை
அலுமாரியில்
அடுக்கி வைத்துவிட்டு
அவள் போகிறாள்

மேய்ப்பரின் சிலுவையில்
அறையப்படாத
நான்காவது ஆணியைச்
சுவைத்த கசப்பில்
பிரியத்தின் சாம்பல் தொட்டு
பல் துலக்கியபடி
அவள் போகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தை 2015

நீலநரி ராஜபாட்டாக
அரிதாரம் தீற்றியது ஆரண்யம்

கறுப்பு ஓநாய்கள்
மொச்சை வாடையால்
நுரையீரல் நிரப்பின
கொம்புச் சிறுத்தைகள் முயங்க
நடுநிசி மான்கள் முனகின

பச்சைக்காகம் சோதிடம் கணிக்க
தாமரைத் தண்டு போல்
கால்களை வரைந்து
உறுமீன் கவ்வியது கொக்கு
பஞ்சவர்ணக் கழுகு
கூட்டிச்சென்ற ஊஞ்சல்களில்
கோடரிகள் ஆடின

ஊதா யானையின்
சுளகிலே புடைத்தது
சுயமிழக்காத ஒட்டகச் சிவிங்கி
“அந்தத் தொட்டியில்
நீலச்சாயம் தேக்கியது
மிகப்பெரிய மூடத்தனம்”



இ.சு.முரளிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரின் சுவடுகளை
வன்மம் தின்றபின்
எஞ்சிய நத்தைக்கோதாய்
காட்டிலே தனித்துக்கிடக்கிறது
ஒற்றையடிப்பாதை
பிணங்களின் பசளையில்
பசுந்தேமலாய் வியாபிக்கும் அறுகம்புல்
ஒற்றையடிப்பாதையினை
மூடிவிட அந்தரிக்கிறது

விலங்குகளின் காலடித்தடங்கள்
காட்டுமிராண்டித்தனத்தால்
காவுகொள்ளப்பட்டன
ஒரு கைப்பிடியளவு வெயிலைக்கூட
யாசிக்காத ஆழ்கடல் போல
மர்மம் நிறைந்தன
ஒற்றையடிப்பாதையிலே
வேடர்கள் பயணித்த நாள்கள்

அருங்காட்சியகத்தில்
தொங்கிக் கொண்டிருக்கும்
என்பு எச்சங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் வயிற்றைக் குமட்டவைக்கும்
நாற்றம் பொதிந்த
வாள்முனையின் திமிரும்
வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கும்
வேட்டையின் மகிமையை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டாற்சுருங்கியின் இலைகளாய்
சூம்பிப்போன தருணத்தில்
மரங்கொத்தியின் அலகிலிருந்து
உதிரும் துகளாயிற்று
என் இறுதி நம்பிக்கை

மின் குமிழுள்
அறுந்தபடி தொங்கும்
தங்குதன் இழையாய்
உனது வார்த்தைகள்

குழு வன்புணர்வுக்கு உள்ளாகும் பொழுதில்
திமிறி அடங்கும்
அபலையின் அங்கங்களாய்
எனது உரிமைகள்

மூக்கை நோண்டியதன் சேகரமாய்
சுட்டிவிரலில் ஒட்டியிருக்கிறது
உனது புன்னகை

உன்னுடைய
சப்பாத்துக்காலிலே நசிபடுமாறு
எரிந்துமுடியும் சிகரெட் துண்டானது
எனது எதிர்பார்ப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலமும் சிறுநீரும் சீழும் சளியும்
சூழ்மமாகி நகரும்
*வைதரணி ஆற்றங்கரையில்
வாழ்வு கழியும் காலமொன்றில்
மேதாவளியில்
வந்தமர்கிறது மற்றொரு தலைமை.

* நரகத்தின் வாயிலில் ஓடும் ஆறு என்பது இந்துமத நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தம் வற்றிய கன்னக்குழி
அன்னாமுன்னாக் காயின்
மேற்பரப்பாய் வெடிக்க
திண்மம் உதிர்ந்த மலைபோல்
தேசப்படங்களால் துரத்தப்பட்டுத்
தனித்தலைகிறேன்

வானத்தை
இழுத்துச் சாத்திவிட்டுச் சென்ற
உன்பிரியத்தை
ஆயுத பூஜையில் அடுக்கலாம்
அல்லது
சவப்பெட்டியில் நிரவலாம்
மயிலிறகோடு
புத்தகத்துள் வைத்த பைத்தியம் நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்மை நூல்கள்
அறுந்து தொங்கும் வாயோடு
விசர்நாயொன்று
என்னை நோக்கி வருகிறது
காரைமுட்களில்
வேட்டி சிக்கிக்கொள்ள
எனக்குப் பிடித்த பாடலை
முணுமுணுத்தபடி
இலந்தைப்பழம் பிடுங்குகிறேன்
கன்னத்தில்
மகள் தந்த முத்தத்தின் ஈரம்



இ.சு.முரளிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணங்களால் பேசியது நெருநல்
கடைசிப் புன்னகையை
சூரியன் கழுவி ஊற்ற
ஊரடங்கு பல்லை நெறுமியது
பிடிமானம்
நாய்களின் பாடலால் அந்நியமானது
உலோகக் குருவி பிழுக்கை தள்ள
நிணக்கூழால்
மலங்கழுவியது பதுங்குகுழி

நட்சத்திரங்களின்
ஒவ்வொரு சிமிட்டலிலும்
ஏதோவோர் வீட்டில்
உலைநீர் மட்டம் சறுக்க
வாழைக்காய்த் தாறுகள்
வாசலிலே
பிச்சை கேட்டு ஒதுங்கின

சிவப்புக் கதையாளிகளால்
அட்டையாய்க் காதுகள் சுருள
குழியில் இறக்கப்பட்டது
தொன்மக் கடிகாரம்
ஆளாளுக்கு பிடிமண் போட
மூடுண்டது நெருநல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலியிடம் சிக்கிய பொறி

கார்த்திகை 2014

காற்று
மேகத்துணி பிழிய
கலாபமுகை விரித்தேன்
நடனஅசைவுள்
வெப்பக் கடத்தியாகச் சுவறி
நாயுருவி பதித்த
செம்மறித்தரையாக்கினாய்
இப்போதும்
என் தோகை ஆடுகிறது
உன் தோளிலே காவடியாக

எலியிடம் சிக்கிய பொறி நான்
கொறித்துத் திகட்டியபின்
அடர்காடுகளில்
தந்தங்களோடு அலைகிறாய்

உன்கண்ணாடி
தூக்கி எறிந்த விம்பம்
ஊரிகளாய் விரவிய கடற்கரையில்
தனித்தமர்ந்து
பிரியத்தை எழுதுகிறேன்
எழும்பும் போது
பின்புறம் ஒட்டியிருக்கும் ஊரிகளைத்
தட்டிவிடத் தெரியாத விரல்களால்.



இ.சு.முரளிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருவமடைந்த கனவு



உறக்கத்தின் நெடுஞ்சாலையில் இடைமறிப்பு
அவர்கள் கடவுளின் வேடமிட்டு நடித்தனர்
விலக்கப்பட்ட கனியின்
வரைபடத்தோடு அலைந்தனர்
பிள்ளைக்கறி பரிமாறி
பொம்மைகளை முத்தமிட்டனர்

கடவுளின் ஒப்பனையில்
என் சாயல் கண்டு நடுங்கினேன்
"கனவே என்னை கைவிட்டு விடு"
கனவுச்சத்தில் மன்றாடி
இன்றில் விழித்தேன்

சிலுவையில் மீதக்கனவு
உயிர்த்தெழல் கனவுக்கில்லை என்ற
நம்பிக்கையோடு காத்திருக்கிறேன்
பருவமடைந்த கனவின் வரவுக்காக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிசுக்களின் குருதியை
ஆடை திரளுமாறு
காய்ச்சிப் பருகிய வன்மாளி
வேட்டைப் பற்கள்
முளைக்குமுன் பால்குடி மறந்ததால்
தாய் பாக்கியசாலியான கதை

கதவிலி அறையொன்றில்
சொற்களின் சாம்பலில் குந்தியடி
கவிதைப் பிரம்பைத் தேடிய
அந்தகனின் கதை

மலையால் விரட்டப்பட்ட நதிகள்
தூரத்துக் கழிமுகமொன்றில்
காலாறி
சுயமிழந்து கடலான கதை

தீத்தனப்பொழுதுகளை
அபகரித்து
திரள் குளிராக்கிய துர்தேவதை
நடுக்கத்தின் காலுதைப்பில்
சுள்ளி பொறுக்கி எரிக்கும் மீத்துவமற்று
துருவப் பிரதேசத்திலே புதைந்த கதை



இ.சு.முரளிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டி சொல்லாத இந்தக்கதைகளை
ஊழியின் ஒற்றைத் துமி
உன் மீது தெறித்திருப்பின்
நீயும் அறிந்திருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிழாக்கடைகளெங்கும் சிவப்பு பலூன்கள்

புரட்டாதி 2014

நெகிழ் சட்டங்களால் சடைக்கிறது
வண்ணத்துப் பூச்சிகளை
பொரித்துச் சப்பும்
வன்மாளிகளின் தெருவியல்

அடைக்கோழியின் உதட்டில்
மஞ்சட் கருவாசனை
பள்ளிச் சீருடைபொசுங்குமாறு
வெண்கட்டியின் மூச்சுக்காற்று
காவிநாம்பனால் மேயப்படும்
முலையிலிக்குருத்து

இறைநம்பிக்கை நிரவித் ததும்ப
கோவில் நோக்கிப் பறந்த தும்பி
சிவப்பு பலூனைக் கையுட் பொத்தியபடி
தலையின்றிச்
சாக்கடையில் மிதக்கிறது

புதிர்மைப் பருவத்து
முடிச்சியம் குறித்த புரிதலற்று
கயிறுகளின் பயணம்
அந்தகார வளைவில் அவிழாளிகள்.



இ.சு.முரளிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகராதி நிராகரித்த அந்தச் சொல்

புரட்டாதி2014

அன்னியோன்னியத்தை
நறுக்கி விழுங்கும்
வன்மத்தோடு
அசிங்கத்தின் பள்ளத்தாக்கில்
மல்லாந்து படுத்திருக்கிறது
நீ பெய்த சொல்

சிட்டுக்குருவியின் விழித்திரை நுழையும்
தொலைபேசிக் கோபுர விம்பத்தின்
பெறுமானத்தில்
எந்தக்கவிதையிலும் செருகப்படாது
பரதேசியாய் அலைகிறது அது

சொல்வெளி மேயும்
விலங்காவளியின்
சட்டைப்பையிலிருந்து
தவறி விழுந்து அச்சொல் தீப்பிடிக்க
கன்றின் காது திருகுகிறது தாய்ப்பசு

கருக்கு உதடுகளில்
சோம்பல் முறிக்கும்
சொல்லின் சுதந்திரத்தால்
அகராதிக் கூண்டுள்
ஏக்கப் பெருமூச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றில் குழையும் தென்னங்கீற்றாய்
வசீகர வால் அசைய
அத்தனை கனிகளிலும்
தனக்குரியது ஒன்றை
எப்படித் தேர்ந்தெடுக்கிறது அணில்?
காலமெல்லாம் கட்டற்ற வாழ்வு
ஒரு நாளேனும்
சுதந்திரத்தின் பரவசத்தை உணர்ந்திருக்குமா?
அணிலின் மூதாதைகளில் ஒன்று
கொறித்துப் போட்ட எச்சத்தில்
முளைத்திருக்கலாம் அந்தக் கொய்யாமரம்!
மண், மழை, வெயில், காற்று, விதை
எவையுமே பூனையுடையதல்ல
ஆனாலும்
கிளைகளில் ஊடுருவும் அணிலை
விரட்டுவதே
பூனையின் இயல்பாகிப் போயிற்று

இன்று
குறிவைத்த அணிலை
இரையாக்கிய பின்னரும்
கொய்யாமரத்தடியில் குந்தியிருக்கிறது
அந்தப்பூனை.



இ.சு.முரளிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராயிரம் வருட நெரிசல்
கதவுடைத்து நுழையும் சொற்கள்
வழமைக்கு மாறான ஒழுங்கிலே அமரும்
எந்தத் தூண்டிலிலும் சிக்காமல்
காலங்காலமாகத் தப்பிக்கின்ற
நீலம் போல
அர்த்தம் சுவறி ஈரலிக்கும்
ஒளிர்மை குன்றியவை பிடுங்கி
படுகன்று நாட்ட
முகிழ்தளிரில்
குருவிச்சங்கனியின் பிசுபிசுப்பு

உருவொளி தூவப்பட்ட
பனிக்கட்டிச் சொற்களின் ஆழ்துளையுள்
ஓடையொன்றின் சலசலப்பை உணர்ந்தால்
உனக்குப் பிடித்த
பெயரொன்றைச் சூட்டிக்கொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருங்காட்சியகத்தில் கடவுளின் வாள்

பங்குனி 2014

குழந்தைகளைக் கீழே இறக்கிவிட்டு
ஆயுதமேந்தினார் கடவுள்
இரும்புத் தொப்பியின் பின்னால்
வானம் ஒளிந்து கொள்ள
பிசாசுகள் தேவதைகளைப் பயமுறுத்தின
கடலின்
இறுதித்துளி ஈரத்தையும்
தீ மேய்ந்தது
கடவுளைத் தவறவிட்ட குழந்தைகள்
ஆயுதமேந்தின

பின்னொரு நாளில்
ஆயுதத்தைத்தூர எறிந்த கடவுள்
குழந்தைகளைத் தூக்கக் குனிந்தார்
அவர்கள் பெரியவர்களாகியிருந்தனர்.



இ.சு.முரளிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13



இராசிகளின் தொடுகையற்று
மாதங்களின் எல்லைக்கப்பால்
உனது ஏகாந்தம்

இறுதி இராப்போசனத்தில்
கசிந்த நூதனச் சிரிப்பு
இருட்குகைகளில் எதிரொலிக்கிறது

பேய்க்கதையாளிகளின்
அவிபாகம் அருந்தி
பஞ்சவர் வனவாசமாய்
ஆயுள் தண்டனையாய்
அரசியல் யாப்பின் திருத்தமாய்
உன்னை இற்றைப்படுத்தி
ஈமத்தாழிகளை யாசிக்கிறாய்

இசையால் பரிசுபெற்ற
பாலைநகர் வீழ்ச்சியால்
முல்லைபுகு பாணர்கள்
உன் ஸ்பரிசத்தில்
கையறு நிலைச்செய்யுட்களில்
விதைக்கப்பட்ட பின்னரும்
அறிவு அடம்பிடிக்கிறது
நீ அபாக்கியசாலி இல்லையென்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றைத் தவளை

பங்குனி 2012

பருத்த விழிகளால்
என்னைத் வசப்படுத்தியது ஒற்றைத்தவளை

கர்ப்பிணியின் வயிறாய் புடைத்து
தொண்டைக்குழியில் ஊசல் அசைய
பரவசத்தை விசிறியபடி
புத்தக அறையின்
ஒரு மூலையிலிருந்து மறுமூலைக்கு
அடிக்கடி புலம்பெயர்கிறது

குழந்தைப் படையினன் உடலில்
திணிக்கப்பட்ட
இராணுவ சீருடை போன்ற மேற்பரப்போடு
துள்ளும் தருணங்களில்
வசீகரம் ததும்பும்

காற்றலையோடு தனகும்
மழைக்காலத் தோழர்களின்
கூட்டணியில் அங்கம் வகிக்காது
இங்கு ஏனோ தனித்துக்கிடக்கிறது

வளவின் கிளுவைமர வேலியோரத்தில்
சாரை அரைந்த சுவட்டினை
கண்ட நாள் முதலாக
புத்தக அறையுள் நுழைந்தால்



இ.சு.முரளிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலையில் என் நண்பன்
முழுசியபடி இருக்கிறானா என்று
பார்ப்பது
அன்றாடக் கருமங்களில்
ஒன்றாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரிய விந்தில் கருக்கொண்ட கர்ணா!
உன் முலைவாசம் அகலுமுன்பே
பூதகியிடம் பால் குடிக்கப்
புறப்பட்டுவிட்டோம்.

வியூகம் அமைத்த கண்ணனும்
வில்லேந்திய அருச்சுனனும்
சிரங்கு சொறிச் சித்தாந்தத்தை
முன்னிறுத்தி
உன் மரணத்திற்கு
உரிமை மனுத்தாக்கல் செய்கிறார்கள்.

இறுதிக்கணத்தில்
தேரினைக்குழியில் இறக்கிவிட்டு ஓடிய
சல்லியனின் சரித்திர சாதனை
சாரையின் வாய்வழியே
உடலினுள் நகரும் தவளையாயிற்று

வித்தை கற்றுக்கொடுத்த பரசுராமன்
ஒரு களையைக் காரணங்காட்டி
வயலையே துவம்சம் செய்யச் சாபமிட்டு
இன்று
முடிவிலி வலியில் முனகுவதாய்
பாசாங்கு செய்கிறான்



இ.சு.முரளிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரனின் மாறுவேடத்தைப்
புரிந்தபின்னும்
கவசத்தைக் கழற்றியதால்
புத்திர சோகத்தை
அங்குல இடைவெளியில் தரிசித்தாய்

விசுவாச வரத்திற்காகத் தவமிருந்தாய்
சகோதர யுத்தமே சாபமாயிற்று
கடைசியில் குந்தியின் உறவும்
ஈசலின் ஆயுள் ரேகையாக
துரோகங்களின் ஆரவாரத்தில்
அமைதியானாய்

விடியலைக் கூந்தலில் செருகி மறைத்த
பூதகியின் பருத்த முலைகளில்
பால் சிந்துகிறது
"மறதி" என்ற தேசிய நோயினால்
ஒன்றுபட்ட நாம்
முலையை நோக்கி முன்னேறுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை 2009

'ஓ... தேவனே!
வெற்றிகளின் வெளிச்சம்
வெளிக்கிளம்பும் போதெல்லாம்
தோல்வியின் வரலாறும் தூசு தட்டப்படும்
ஆழ் துளைக் கிணற்றின் அடியிலிருந்த
உன் வாழ்வு
"யூதாஸின்" சிந்தனை மாற்றத்தால்
அவஸ்தைகளின் விளிம்பில்
அஸ்தமானமாகிவிட்டது.

கடலை அருந்திய
காகங்களின் கரைதல்
காதுமடல்களை உரசும் பொழுதொன்றில்
உன் "உயிர்தெழல்" பற்றி
உலகம் வியக்கிறது

மேய்ச்சல் நிலம் நோக்கியே
ஆடுகளின் பயணம் ஆரம்பித்தது
ஆனாலும்
வானிலிருந்து நழுவி விழும்
மழைத்துளிகளாய்
பாதைகள் விலகின
இறுதியில்
பட்டிக்குள் அடைபட்ட ஆடுகள்
பட்டினியால் இறந்தன.



இ.சு.முரளிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைச்சுற்றி முகிழ்த்தது
ஒளி வட்டம்
உன் வார்த்தைகளின்
எச்சில் தெறிப்பில் தோன்றிய வானவில்
கடவுளின் நிறங்களின் கலவையானது
அப்போதேனும் புரிந்து கொண்டாயா...?
உன்னை வணங்குவோமே தவிர
வழி தொடர மாட்டோமென்று
வாழை மலடாய்ப் போன இனத்தில்
இன்னொரு யேசுவிற்கு இடமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி 2009

உன்னை முதன்முதலாகக்
கையிலேந்திய நிமிடத்தில்
உலகம் சிறுபுள்ளியாகச் சுருங்கிப் போனது
உன் மொழியோடான புரிதலோடு
முரண்பட்ட கணங்களில்
என் அறிவு அசிங்கப்பட்டுக் குறுகியது
நாளைய வாழ்விற்கு
நம்பிக்கையூட்ட
உன் முத்தம் ஒன்றால் மட்டும்
எப்படி முடிகின்றது?
பூவிதழ்களால் தரமுடியாத
தொடுகை உணர்வு துளிர்த்த பாதங்களால்
மார்பில் உதைக்கும் எனது விம்பமே!
உன் சிறுநீரின் மென்சூட்டில்
என்னுள்
வலையறுக்கும் சிலந்தி
உலகின் விளிம்பு வரை
சென்று மீள்கிறது.

நீ
வினாத் தொடுக்கும் வேகம் கண்டு
வியந்து விழிமூடும் போது
கவியும் இருட்டில் கரையும் பெருமூச்சு
“இவள்
பொம்மைகளின் தேசத்தை விட்டு
வெளிவர எத்தனிக்கும் பொழுதொன்றிலாவது
போர் ஓய்ந்து போகாதா?”



இ.சு.முரளிதரன்

நாய்களின் குரைப்புகளினிடையே
காதுகளைத் தொடுகிறது
சுடலைக் குருவியின் அலறல்

வீடுகளுக்குள் முடங்கிய
விழிகளில்
பயத்தின் சாயல் படிந்திருக்கிறது.

மாலையில் பெய்த மழையின் ஈரத்தால்
தெருவில்
அடையாளங்கள் நன்கு பதிந்திருக்கும்
வருகையின் பதிவை
இன்னொரு மழை அழித்துவிடும்
இழப்பின் அறிக்கையை
வரலாறு உள்வாங்கிக் கொள்ளும்

நாளையும்
நாய்குரைக்கும்
சுடலைக்குருவி அலறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவலரண் காக்கும் கவி

மார்கழி 2003

மேகம் கிளித்தட்டை
மெல்ல நிறுத்திவிட காகம் வியக்கும்
கருமை நிறம் வானத்தில்
சில்லென்று வீசும்
சிலுசிலு காற்றியல்பால் உள்ளாடை தாண்டி
உணர்வைத் தொடும் ஈரம்
மெல்ல விழுந்த துளி
மேனி தொடுகையிலே சொல்ல முடியாச்
சுகம் தோன்றும்
மண் வாசம்
நாசிப் பரப்பில் நடை பயிலும்
தேவதைகள் ஆசிவழங்கும் அறுகரிசிபோல
விழுங்கோடி மழைத்துளிகள்
கொஞ்சிக் குலவுகையில்
நாடித்துடிப்பின் சுவை இனிக்கும்
நெற்றிவழி சிந்தி இதழடையும்
சின்னத்துளியமுது பந்திவைக்க
தேன் தெவிட்டும்

பாதம் நனைக்கும் தெருவெள்ளம்
மேடுபள்ளம் தேடும் அழகில்
அருவிஅபிநயங்கள்
ஆயிரமாய் தத்துவங்கள்
காகித ஓடம் கவிழ



இ.சு.முரளிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயதில் ஏதோ "டைட்டானிக்" என
நினைத்து
விக்கித்த ஞாபகங்கள் மீளும்
அவளுடைய தோளுரசி
ஆதரவாய் ஒற்றைக் குடைபிடித்து
சென்ற நாளும் சிந்தையிலே தட்டும்


உயிரின் வேர் தித்திக்க
சந்தம் சரமாரியாய் அவிழும்
சங்கீதம் கன்னக்கோல் வைத்து
இதயம் திருடிவிடும்
இன்பம் வெறுத்து இனியமழை கண்டஞ்சி
இல்லம் ஒதுங்கும் மனிதரோடு
கூட்டாட்சி வைத்தேன் குசினி ஒழுகுமென்று
எல்லையிலே
சா அருகில்
வான்கவிதை பார்த்து
ரசித்திருப்பான்
காவலரண் காக்கும் கவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிதை எளிமைப்படுத்தப்பட வேண்டும் என்ற கோட்பாட்டினை முன்வைப்
பவர்களுக்கு எதிரானதாகவே இத் தொகுப்பிலுள்ள கவிதைகள் அமையப்
போகின்றன.

*- தானா விஷ்ணு*

ISBN 978-955-7790-00-8

9 789557 790008

சேதினிகா
வெளியீடு

ஆகாயம் பதிப்பகம், இமையாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org